2. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

(1) 'ஏ', 'பி' பிரிவு ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோரின் இணைப்பு தாமதப்படுவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். கணபதி அவர்கள் 'ஏ', 'பி' பிரிவுகளில் உள்ள ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் ஆகியோரின் இணைப்பு குறித்த விஷயங்கள் வெகுவாகத் தாமதப்படுவது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள். இது எந்த வகையில் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குட் பட்டது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

3. தகவல் கோரல்.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் நீண்ட நாட்களாகக் கேட்டு வந்த ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை தமிழக அரசு இன்றைய தினம் இந்த அவையிலே வைத்திருப்ப தற்காக நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி தெரிவித்துக் கொள்கிற அதேநேரத்தில், அரசைப் பாராட்டுவதே இல்லை என்று சிலர் வருத்தப்படுகிறார்களே அவர்கள் திருப்தியடைவதற்காகப் பாராட்டு தலைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், ஒன்றைக் குறிப்பிடவும் வருத்தப்படுகிறேன்.

காரணம் அரசாங்க ஆணை 15-2-1978 தேதியிட்ட எண்....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஏதாவது தகவல் கேட்பதாக இருந்தால் மட்டுமே கேட்கலாம். நீங்கள் விவரத்திற்குள் போகாதீர்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் விவரத்திற்குள் போகவில்லை. தகவலைத்தான் கேட்க விரும்புகிறேன்.

நாங்கள் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகள் எல்லாம் நிரூபிக்கப்பட்டி ருக்கின்றன என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தயவு செய்து அறிக்கைக்குள் போகாதீர்கள். நீங்கள் தொடங்கும் பாணியே விவாதப் பாணியாக இருக் கிறது. தகவல் என்ன வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள்.

1978 மார்ச் 1]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் அரசாங்கத்திடம் கேட்கவிரும்புவது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். எப்போது அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும், எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பார்களானால், அது இன்னும் நன்றாக இருக்கும் என்பதால் அரசாங்கத்தின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நீதிபதி இஸ்மாயில் அவர்களுடைய விசாரணைக் கமிஷன் மீதான அறிக்கை இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அதில் 303 ஆம் பக்கத்திலே சுருக்கமாக அரசாங்கம் இந்த அறிக்கையின்மீது என்னென்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று வெளியிடப்பட்டிருக்கிறது. தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற ஒன்றுக்கு அதிகமான விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எதிர்பார்க்கிறார் என்று நினைக்கிறேன்.

இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 6 மாதத்திற்குள் சட்ட மன்றத்தில் வைக்க வேண்டும் என்று விதி இருந்தாலும்கூட, 25 நாட்களுக்கு முன்பாகவே அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. எதையும் தாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு சீக்கிரமாக இந்த அறிக்கையை வைத்ததன் நோக்கம் இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான். காரணம் இது ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி பிரச்சினையல்ல. அரசியல் கைதிகளுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(1) 'ஏ', 'பி' பிரிவு ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோரின் இணைப்பு தாமதப்படுவது குறித்து.

திரு. கே. எஸ். கணபதி : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1966 முதல் இன்றுவரை முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாதவர்களாகிய பணியாளர்கள் இன்னும் அரசு ஊழியர்கள் அந்தஸ்துக்கு உயர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அரசு உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் 'ஏ' விங் பள்ளிகளாக இருப்பதால், அதன் ஆசிரியர்களும் ஊழியர்களும் ஒரு தனி அமைப்பாகவும், முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 'பி' விங்